செய்தி வெளியீடு நாள் : 27.1.2024

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் உள்ள துறை பிரிவுகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் குறித்தும் அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

*******

இன்று (27.01.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பரப்புத் திட்டப் பிரிவு (APU), பரப்பு வளர்ச்சிப் பிரிவு (ADU), கட்டுமான பிரிவு (Construction Wing) ஆகிய பிரிவுகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் அறிவிப்புகள் 2023-2024ஆம் ஆண்டு அறிவித்த திட்டங்களின் தற்போதைய நிலைக் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.எ.பாலசுப்ரமணியன், திரு.என்.ரவிக்குமார், கிளாம்பாக்கம் பேருந்து முனைய தலைமை நிர்வாக அலுவலர்/டி.ஆர்.ஓ திரு.பார்த்திபன், கண்காணிப்பு பொறியாளர் திரு.என்.சீனிவாச ராவ் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.